Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் : 389

National Tamil Daily

இதழ் 37
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 5 ஜுல்ஹஜ் 7 ஞாயிற்றுக்கிழமை [19.3-67]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
வீதி கொழும்பு

# 1971 முதல் உணவு இறக்குமதி இருக்காது

## இந்திய அரசாங்கம் உறுதி

### ராதாகிருஷ்ணன் விளக்கம்

புதுடில்லி, மார்ச் 18

உணவு இறக்குமதியை 1971-ம் ஆண்டுடன் ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஸ்திரமான நடவடிக்கை எடுப்பதென்று இந்திய அரசாங்கம் உறுதி செய்து கொண்டிருக்கிறது

1976-ம் ஆண்டுடன் வெளிநாடுகளிலிருந்து பொருளாதார உதவிகளை எதிர்பார்க்கும் நிலைமையையும் ஒரு முடிவுக்கு கொண்டுவர இந்திய அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிறது.

இந்தத்தகவலை ஜனாதிபதி டாகடர் ராதாகிருஷ்ணன் இன்று இந்திய பாராளுமன்றத்தின் இருசபைகளையும் கொண்ட கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் கூறினார்.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு சிலமாற்றங்களுடன் பதவிக்குவந்துள்ள திருமதி இந்திராகாந்தியின் தலைமையிலான புதிய அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் முக்கிய அபிவிருத்தித் திட்டங்களின் நாலு அம்சங்களை ஜனாதிபதி விளக்கினார்.

1971-ம் ஆண்டு முதல் உணவு இறக்குமதிக்கு ஒரு முடிவுகட்டப்படும், ஜீவாதாரப்பொருட்களின் விலைகள் ஏறாமல் இருப்பதற்கான ஸ்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். 1976-ம் ஆண்டுக்குள் வெளிநாடுகளிலிருந்து பொருளாதார உதவிகளுக்கு எதிர்பார்க்கும் நிலைமை நீக்கப்படும். பிறப்பு, விகிதத்தை 1000ல் இருந்து 40 அல்லது 25 விகிதத்திற்கு குறைக்க நடநடவடிக்கை எடுக்கப்படு என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த திட்டங்களை அமுலுக்கு கொண்டுவருவதற்கான சட்டம் இயற்றப்படும் என்றும் அவர் விளக்கினார்.

#### பசுவதை

பசுவதை பிரச்னை பற்றி ஜனாதிபதி குறிப்பிடுகையில் அதுபற்றி ஆராய்வதற்கான ஒரு உயர்தர கமிட்டி நிறுவப்படும் என்றார்.

நாட்டின் நிதிஆண்டு விஷயங்கள்பற்றி ராஜ்ய

6-ம் பக்கம்பார்க்க

---

ராஜஸ்தான் நிலைமை

## இந்திரா மந்திரிசபைமீது நம்பிக்கையில்லா தீர்மானம்

### பதவியேற்ற 6-வது நாளில் முதலாவது பிரேரணை

புதுடில்லி, மார்ச் 18

இன்று இந்திய லோக சபை கூடியபோது, மத்திய அரசாங்கத்தின் (இந்திரா மந்திரிசபை மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டது.

ராஜஸ்தானில் ஜனாதிபதி ஆட்சியைக் காங்கிரஸ் கொண்டுவந்ததை ஆட்சேபித்து எதிர்க்கட்சியினர் காங்கிரஸ் கட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தனர். [6-ம் பக்கம் பார்க்க]

---

## சுவாமி நடராஜானந்தஜீ காலமானார்

மட்டக்களப்பு, சனி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்விவளர்ச்சிக்கு அயராது உழைத்தவரும் அநேக பாடசாலைகளை உருவாக்கப் பாடுபட்டவருமான சுவாமி நடராஜானந்தஜி மட்டக்களப்பில் இன்றுகாலை காலமானார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த காரதீவை சொந்த ஊராகக் கொண்டவர்இவர். சுவாமி விபுலானந்தரின் நெருங்கிய உறவினர். ஆரம்ப காலத்தில் இவர் திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் துஷன் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். [6-ம் பக்கம் பார்க்க]

---

★ சிங்கம் மார்க் ★
★ சந்தனாதித் ★
★ தைலம் ★

யாழ்ப்பாணப் பகுதி ஏஜண்ட் என். எம். எஸ். & பிரதர், கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உங்கள் பாவங்கள் மன்னிககப்படும். எழுந்திருங்கள். நடவுங்கள்.

—மாத்யூ

ஈழநாடு

Eelanadu Natio al Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹூ பங்குனி மீ 5 உ (19-3-67)

## தண்ணீரும் கண்ணீரும்

எதற்கும் யார் மீது பழியைப் போடலாமென்ற மனப் பான்மைதான் இங்குள்ளோர் மத்தியில் அதிகரித்து வருகிறதேயொழிய எல்லோரும் ஒன்றுபட்டு தவறு நேராமல் எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிப்போம் என்ற மனப்பான்மையைக் காண முடியாதிருக்கிறது. இதனால் தான் நாம் முன்னேற முடியாமலிருக்கிறோம்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேசீய அரசாங்கம் முன்வந்தது. பிரதமர் முதல் மந்திரிகளும் அரசாங்க அதிகாரிகளும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதுபற்றி நிறையப் பேசினார்கள். உணவு. விவசாய, நீர்ப்பாசன, காணி அபிவிருத்தி இலாகா அதிபர்களும் நிபுணர்களும் அறிக்கைகளும் திட்டங்களும் தயாரித்தனர். அறிக்கைகளிலும் மேடைப் பேச்சிலும் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளிலுமிருந்து, உணவு உற்பத்தி எதிர் பார்த்ததற்குமதிகமாக அதிகரித்திருப்பதாகவே பலரும் நம்பினர். பிரதமர் இதை நேரில் பார்த்தறிவதற்காக சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருக்கிறார். அவரது சுற்றுப் பயணம் வெற்றியளித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அநுராதபுர மாவட்டத்தில் அங்கம் குடியேற்றத் திட்டத்திற்கு விஜயம் செய்த பிரதமர், விவசாயிகளின் கஷ்டங்களை மட்டுமல்ல விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட அரசாங்க இலாகாக்களுக்கிடையில் இணைப்பில்லாததையும் அறிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

கால் ஏக்கர் நிலத்தில் மிளகாய் செய்த பண்டா என்ற விவசாயியை, ஓர் ஏக்கர் நிலத்தில் மிளகாய் பயிரிடும்படி 'புத்தி' கூறிய விவசாய இலாகா 'நிபுணர்கள்' அந்த விவசாயிக்கு தண்ணீர் காட்டத் தவறிவிட்டனர். கால் ஏக்கர் மிளகாய்ச் செய்கையினால் 560 ரூபாய் இலாபமடைந்த விவசாயி ஓர் ஏக்கர் நிலத்திற்கு மிளகாய்ச் செய்கையை விஸ்தரித்து விட்டு தண்ணீர் இல்லாமல் கண்ணீர் விடுகிறார். இதை நேரில் பார்த்தபிரதமர் அந்த விவசாய 'நிபுண'ரிடம் கேட்ட போது அவர், நீர்ப்பாசன இலாகாமீது பழியைப் போட்டார். நீர்ப்பாசன இலாகா அதிகாரி விவசாய இலாகா அதிகாரி மீது குற்றம் சுமத்தினார். இலாகாக்கள் ஒன்றின்மீது ஒன்று பரஸ்பரம் குற்றச் சாட்டைச் சுமத்திக் காண்டிருந்தால் விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்காது கண்ணீர் தான் மிஞ்சும். முடிவில் அரசாங்கம்தான் கண்ணீர் விட நேரிடும்.

சரியான திட்டமும் அதை ஒருமுகப்படுத்தி செயல் படுத்தாததுமே, இலங்கை சுதந்திரமடைந்தும் முன்னேற்றமடையாமலிருப்பதற்குரிய ஒரே காரணமென்பதை நாம் இப்பத்தியில் இதற்குமுன்னரும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளும் பொதுமக்களும் முன்வந்தால் போதாது. பொதுமக்களின் பணத்தினால் இயங்கும் உணவு, விவசாய, காணி, நீர்ப்பாசன இலாகாக்களுக்கிடையில் இணைப்பும், அந்த இலாகாக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மத்தியில் சேவைமனப்பான்மையும் நிலவ வேண்டியது அவசியம்.

## "கி. மு. சங்க முயற்சிக்கு ஆதரவு கொடுக்கப்படும்"

### தொல்புரத்தில் சுகாதார அமைச்சர்

சுழிபுரம், சனி

"எப்பகுதிமக்களுக்கும்வித்தியாசமற்ற முறையில்நாம் சேவையாற்றிவருகின்றோம். மக்களின் சுய தேவைக்கு எவைஎவை அவசியம்தேவை என்பதை நேரடியாகக் கவனித்து ஆவன செய்வதற்காகவே இங்கு வந்துள்ளேன். கடந்த பல வருடங்களாக கிராம முன்னேற்றச்சங்க இயக்கங்கள் நாட்டின் பல நன்மையான பணிகளைச் செய்துவந்துள்ளன. அதே போல் மேலும் அதன் பணி விரிவடையும். கிராம மக்களின் சேவையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் இயக்கங்களின் கோரிக்கைகள் நன்கு பரிசிலனை செய்யப்பட்டு தேவைகள் நிறைவேற்றப்படும் என்பதை தேசிய அரசாங்கத்தின் சார்பில் உறுதி கூறுகிறேன். இப்பகுதியிலுள்ள மக்கள் இவ்வைத்தியசாலையால் அடையும் நன்மைகளை எனது பகுதி உத்தியோகத்தர்கள் மூலம் அறிந்துவருகின்றேன். மேலும் இங்கு ஒரு பிரசவ விடுதி அவசியம் தேவை என்ற கோரிக்கை சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது. இதனை எனது அமைச்சு கவனத்தில் கொள்ளும். கிராம முன்னேற்றச் சங்கத்தின் முயற்சிக்கு மேலும் ஆதரவு கொடுக்கப்படும்."

மேற்கண்டவாறு தொல்புரம்அரசினர் வைத்தியசாலையைத் திறந்துவைத்துப்பேசியசுகாதாரஅமைச்சர்குறிப்பிட்டார். சுழிபுரம் அரசினர் விக்டோறியாக் கல்லூரி முன்றலில் இருந்து மேளவாத்திய சகிதம் அமைச்சர் அழைத்துவரப்பட்டார். வழிநெடுகிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

திறப்புவிழா வைபவத்திற்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் தலைமைவகித்தார்.

அவர் தமது தலைமையுரையில் தேசிய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் மக்களின் குறைகளை நேரில் பார்வையிட்டு அவற்றைத் தீர்க்க வேண்டிய முறைகளைப் பரிசிலனை செய்யவே இன்று எமது இடத்துக்கு வந்துள்ளார் என்றும் அமைச்சரிடம் பலதரப்பட்ட விஷயங்கள் கோரிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றை எல்லாம் உடன் நிறைவேற்ற முடியாதுவிட்டாலும் ஏழை மக்கள் நிறைந்துள்ள இப்பகுதிக்கு ஒரு பிரசவ விடுதி அமைப்பதில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் திரு. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார். திரு. அ. தையல்பாகர் ஜே. பி. வரவற்புரை நிகழ்த்தினார்.

## விவசாயிகள் கஷ்டம்

சுழிபுரம், சனி

இப்பகுதியில் வெண்காயம் விளைவித்தவர்கள் இப்போது என்னசெய்வதென்று தெரியாத நிலையிலிருக்கிறார்கள் இவர்களின் வெண்காயத்தைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் வாங்குவதற்கு இன்னும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையாம். ஜப்பான் கால் சட்டைத்துணி விநியோகம் சம்பந்தமாக சமீபத்தில் வெளியான துண்டுப்பிரசுரமொன்றின் எதிரொலியே இது என்று கூறப்படுகிறது.

## சென்ஜோன்ஸ்-மத்திய கல்லூரி கிரிக்கெட்

### 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றுமுன் தினம் ஆரம்பமான சென்ஜோன்ஸ்-மத்தியகல்லூரி கிரிக்கெட் போட்டியில் ஆறு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்படி போட்டி நடைபெறுகையில் பெரும் வெடிகளைக் கொளுத்தக் கூடாதென்றும் ஆர்ப்பாட்டங்களோ, சண்டைகளை எழுப்பக் கூடிய கோஷங்களையோ செய்யக் கூடாதென்றும்வட மாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் சகலருக்கும் அறிவித்தல் கொடுத்திருந்த போதும் சம்பந்தப்பட்ட ஆறுபேரும் வெடிகளைக் கொளுத்தியதோடு, மதுபாதையில்நின்று ஆர்ப்பாட்டம் செய்ததாலேயே பொலிஸாரால்கைது செய்யப்பட்டனர். [ந நி]

தே. ஐ. தொழிற்சங்கம்

## மே தின விழாவுக்கு மந்திரிகளை அழைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்க் காங்கிரஸின் கீழ் இயங்கும் தேசிய ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனம் இம்முறை மேதினவிழாவுக்கு இரு மந்திரிகளையும், தென்னிலங்கையிலுள்ள சில எம். பி.க்களையும் அழைக்கத் தீர்மானித்துள்ளது.

தேசீய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா, தொழில் மந்திரி ஜனாப் முகம்மது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் எம். பி. ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பல தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பல பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்களெனத் தெரிகிறது.

சம்மேளனத் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சுமார் 50க்குமேற்பட்ட தொழிற்சங்கங்கள் கலந்துகொள்ளும். இரு ஊர்வலங்கள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இதுவிஷயமாகக் கலந்தாலோசிக்க இம்மாத இறுதியில் ஒரு விசேஷ கூட்டம் நடைபெறவுள்ளது. [ந நி]

## உருளைக் கிழங்கு உற்பத்தியில் சாதனை

கோண்டாவில், சனி

உருளைக்கிழங்கு உற்பத்தியில் இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் சாதனையொன்றை நிலைநாட்டியிருக்கிறார்கள். இதுவரை இங்குள்ள ப. நோ. கூ. சங்கம் 2000 அந்தர் உருளைக் கிழங்கை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்துள்ளது. சராசரியாக இம்முறை ஒரு விவசாயிக்கு 1 அந்தர் விதை உருளைக்கிழங்குமூலம் 10அந்தர் உருளைக்கிழங்கு கிடைத்திருக்கிறதாம்.

இன்னும் 2200 அந்தர் உருளைக்கிழங்கு இச் சங்கம் கொள்வனவு செய்வதற்கேற்ற வாய்ப்பு இருப்பதாகவும், தற்பொழுது பல விவசாயிகள் அறுவடையில் ஈடுபட்டிருப்பதால் அறுவடை செய்தவுடன் அவையும் கொள்வனவு செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்றும் அறியப்படுகிறது.

## துணிபற்றிப் புகார்

அனலைதீவு, சனி

அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கப்பட்ட ஜப்பான் கால் சட்டைத் துணியில் ஊழல்கள் இருப்பதாக பொதுமக்கள் சிலர் புகார் தெரிவித்துள்ளனர். ஆசிரியர் ஒருவர் தனது செல்வாக்கைப் பாவித்து பல யார் துணிகளைப் பெற்று, பல ரூபாய்களுக்கு விற்பதாக அப்புகாரில் தெரிவித்துள்ளனர். இதனால் இந்தக் கால்சட்டைத் துணிவிநியோகத்தில் இப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தி அடைந்திருப்பதாகவும்தெரிகிறது.

## அதிக உணவு உற்பத்தி

புன்னாலைக்கட்டுவன், சனி

ஊரெழு கிராமவிருத்திச் சங்கம் மாதர் முன்னேற்றச்சங்கம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியின் பயனாக, உணவுத்திணைக்களம் இப்பகுதி மக்களுக்குக் குறைந்த விலையில் கால்நடைகள், கோழிகள் ஆகியன விநியோகிக்கவிருப்பதாகத் தெரிகிறது.

மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி புஷ்பரத்தினம் வைத்திலிங்கம் உணவு அதிகாரிகளுக்கு உதவியாக [illegible] ர்.

## "கூட்டணியினரால் மட்டும் தீர்க்க முடியும்"

யாழ்ப்பாணம், சனி

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியினர் சேர்ந்த கூட்டணியினரால் மாத்திரம் தமிழர்களுடைய பிரச்னைகள் மாத்திரமல்ல, நாட்டில் நிலவுகின்ற பிரச்னைகள் அத்தனையையும் தீர்க்கமுடியும்" என்று வடபிரதேச கம்யூனிஸ்ட் [ரஷ்ய] வாலிபர் சம்மேளனச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில் கூறினார்.

இணுவில் கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியின் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார். திரு. எஸ். மகாலிங்கம் தலைமை வகித்தார்.

## நாட்டிலும் நகரிலும்

சமீபத்தில் நடந்துமுடிந்த தேவிநுவர இடைத்தேர்தல் மற்றைய இடைத்தேர்தல்களை விட ஒருவழியில் விசேடமானதென்று கூறலாம். மூன்றாவது நபர் ஒருவர் இல்லாமல் இங்கே தான் யூ. என். பி. க்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் நேரடியான போட்டி நடந்திருக்கிறது.

வெற்றிபெற்ற சுதந்திரக் கட்சி அபேட்சகர் ரெனிடிமெல் ஒரு மாஜி சி.சி.எஸ். கடைசியாக அவர் அரசாங்கத்தில் வகித்த பெரும் பதவி ஒலிபரப்பு, தகவல் அதிபராகும். அரசாங்க சேவையிலிருந்து பலவகைப்பட்ட அரசாங்க இலாகாக்கள் தொழிற்படும் முறையையும் அவற்றின் குறை நிறைகளையும் அறிந்தவர்கள், எந்தக் கட்சியைச்சேர்ந்தவராயினும் சரி, பார்லிமெண்டுக்கு வருவதால் நன்மையுண்டு. அரசாங்கம் வகுக்கும் கொள்கைகளை செயல்முறையில் நடாத்தி நாட்டின் நிர்வாகத்தை ஏற்று நடத்துவது அரசாங்க இலாகாக்களே. ஆகையால் அவற்றின் உட்சூத்திரங்களை எல்லா எம். பி. களும் அறிந்திருந்தால் அரசாட்சி சுலபமாகவும் துரிதமாகவுத் நடப்பதற்கு ஏதுவுண்டு.

நமது காணி மந்திரி சி. பி. டி' சில்வாவும் மாஜி சிவில் சேவை ஆசாமி. அவர் எத்தனையோ அரசாங்க இலாகாக்களுக்கு அதிபராயிருந்துபழுத்த அனுபவம் பெற்றவர்.

உணவு மந்திரி எம். டி. பண்டா இலங்கையில்மணியகாரன் பதவி அகற்றப்பட்டு காரியாதிகாரி பதவி புகுத்தப்பட்டபோது முதலாவதாகச் சேர்ந்த டி. ஆர். ஓ.க்களில் ஒருவர்.

மந்திரி திருச்செல்வம் அரசாங்க சேவையில் சொலிசிட்டர் ஜெனரலாக இருந்தவர். அவருடைய சட்ட தீர்க்கமான மூளை இன்று பல சட்டவிஷயங்களில் அரசாங்கக்கட்சிக்கு உதவுகின்றது.

பிரதமர் டட்லியும் எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோவும், கைத்தொழில் மந்திரி பிலிப்பும், ஆர். ஜி. சேனநாயகாவும், தொழில் மந்திரி முகம்மதும் பரம்பரையாகச் சொத்து சுதந்திரம் உள்ளவர்கள். இவர்களில் பலருக்கு அரசியல் ஒரு வெறும் பொழுது போக்காக அமைந்துள்ளது.

கொலன்னாவை எம். பி. யும் முன்னாள் கைத்தொழில் மந்திரியுமாகிய ரி. பி. இலங்கரத்ன அரசாங்க சேவையில் சாதாரண குமாஸ்தாவிலிருந்து, தொழிற்சங்க நடவடிக்கைகளால் அரசாங்கத்திலிருந்து நீக்கப்பட்டு. பின்னர் சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஏற்பட்ட போது, வட்டி குட்டியுடன் பென்சன் வாங்கியவர்.

மதவாச்சியின் மைத்திரிபாலாவும், வவுனியாவின் சிவசிதம்பரமும் விவசாய இலாகாவில் பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்களாய் இருந்தவர்கள்.

மந்திரி தஹநா ஆசிரியராக இருந்து ஒவ்வொரு அரசியல் கட்சியாக பதம் பார்த்துவிட்டு, சிறு நாட்களுக்காவது இலங்கையின் பிரதமராயுமிருந்தவர்.

சமஷ்டி கட்சியில் உள்ளவர்களில் இரண்டொருவரைத் தவிர மற்ற எல்லோரும் சட்ட வல்லுனர். வேறெந்த அரசியல் கட்சியிலும் சராசரியாகப் பார்த்தால் இவ்வளவு தொகையான வழக்கறிஞர்கள் இல்லையெனலாம்.

—வழிப்போக்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரியானு சட்டசபை : 13 காங்கிரஸ் அங்கத்தவர்கள்

# எதிர்க்கட்சியில் சேர முடிவு

## அரசாங்கம் அமைப்பதில் காங்கிரஸுக்கு புதிய நெருக்கடி

சண்டிகர், மார்ச் 18

**ஹரியானு சட்டசபையில் அங்கம் வகிக்கும் பன்னிரண்டு காங்கிரஸ் அங்கத்தவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினுமா செய்ய முடிவு செய்துள்ளனர். எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து ஐக்கிய முன்னணி யொன்றை அமைப்பது குறித்து இவர்கள் ஆலோசித்து வருவதாக காங்கிரஸிலிருந்து விலகிய அங்கத்தவர்களின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இதற்கிடையே நேற்று நடைபெற்ற ஹரியானு சட்டசபை சபாநாயகர் தேர்தலில் முதன் மந்திரி திரு. பகவத்தயாள் சர்மா நிறுத்திய அபேட்சகர் தோல்வி அடைந்துள்ளார்.

ஹரியானுவில் காங்கிரஸிலிருந்து விலகிய 12 பேரும் காங்கிரஸ் தலைமைப் பீடத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் முதன் மந்திரி திரு. சர்மாவுக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்குமாறுகோரியுள்ளனர். இதற்காக ஒரு நாளும் குறிப்பிட்டுள்ளனர். தங்களது கோரிக்கைநிறைவேற்றப்படாத பட்சத்தில் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஐக்கிய முன்னணியொன்றை அமைப்போம் என்று காங்கிரஸிலிருந்து வெளியேறிய முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஹரியானு முதன் மந்திரியாக திரு. சர்மாபதவியேற்றிருப்பதை ஆட்சேபித்தே பன்னிரண்டு (சட்டசபை) காங்கிரஸ் அங்கத்தவர்களும் ராஜினுமா செய்ய முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

### பெரும்பான்மை இல்லை

ஹரியானு சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 81. இப்பொழுது காங்கிரஸ் கட்சியே பெரும் பான்மை பலம் பெற்றிருக்கிறது. ஆனல் 12 காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜினுமா செய்தால் இதன்பலம் குறையும். ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையும் காங்கிரஸுக்கு இருக்காது. தற்போதைய கட்சி நிலை: காங்கிரஸ் 48. எதிர்க் கட்சிகள் 33. 12 காங்கிரஸ் அங்கத்தவர்கள் விலகினல் காங்கிரஸின் நிலை 36 ஆகவிருக்கும்.

இதற்கிடையே மூன்று எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் காங்கிரஸில் சேர முன்வந்துள்ளனர்.

# ராஜ்ய அரசாங்கத்துக்கு கூடுதல் அதிகாரம் தேவை

### தமிழ்நாடு கவர்னர் உரை

சென்னை, மார்ச், 18

'பொதுத்தேர்தலின் பின்னர் ராஜ்ய அரசாங்க அமைப்புக்களில்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ராஜ்ய அரசாங்கங்களுக்கு இப்பொழுது கூடுதல் அதிகாரங்கள் இருக்கவேண்டியது அவசியம்'' என்று தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தில்கவர்னர் திரு. உஜ்ஜல்சிங் இன்று உரைநிகழ்த்துகையில் கூறினர்.

''தேர்தலின் பின்னர்ராஜ்யங்களில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ராஜ்யங்களின் அபிவிருத்திக்கு மத்திய அரசாங்கம் தாராளமான உதவிகள் வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் விளைபொருள் உற்பத்தி, கல்வி ஆகியவற்றுக்கு கூடுதலான நிதி உதவிகளை மத்திய அரசாங்கம் அளிக்கவேண்டும். சேலம் எஃகு ஆலை போன்ற பெரிய திட்டங்கள் உருவாகுவதற்கு தடைகள் இருக்கக்கூடாது. ராஜ்ய அரசாங்கங்களின் முக்கிய பணிகளில் மத்திய மந்திரிகளின் குறுக்கீடு தவிர்க்கப்படவேண்டும்'' என்றும் கவர்னர் உஜ்ஜல்சிங் கூறினர்.

# 14 குழந்தைகள் உட்பட 20 பேர்கருகி மாண்டனர்

தைபே, மார்ச் 18

இங்கு நேற்று ஏற்பட்ட தீ விபத்தொன்றில் பதிநான்கு குழந்தைகள் உள்ளிட்டு 20 பேர் கருகி மடிந்தனர்.

மாடி வீடொன்று தீ விபத்துக்குள்ளானதென்றும் 80 நிமிட நேரத்துக்குள்ளாக முழுக் கட்டிடமும் சாம்பலானது என்றும் முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

### நம்பூதிரிபாத் அண்ணுவைச் சந்தித்தார்

சென்னை, மார்ச் 18

ஐந்து வாரங்களுக்குள் தமிழ்நாடு அரசாங்கம் கேரளத்துக்கு 18,000 தொன் அரிசியை அனுப்பிவைக்கும்.

கேரளம் முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாத்துக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. அண்ணுதுரைக்குமிடையில் நேற்று நடந்தசந்திப்பின்போது இது முடிவாகியது. தமிழ்நாடு தனது சுயதேவைகளையும், தன்னையும் வலுப்படுத்தியபிறகு கேரளத்துக்கு உணவுவிஷயத்தில் பூரண ஆதரவைத் தருமென திரு. நம்பூதிரிபாத்திடம் திரு. அண்ணுதுரை தெரிவித்துள்ளார்.

சந்திப்பிற்குப் பிறகு திரு. நம்பூதிரிபாத் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். ''தமிழ்நாடு தரும் 18,000 தொன் அரிசி கேரளமக்களின் உடனடித் தேவைக்குப் பயன்படப் போகிறது'' என்று அவர் கூறினர்.

### பத்திரிகைகள் பற்றி ஜே. ஆர்.

கண்டி சனி

'பத்திரிகைகள் சுதந்திரமாகஇயங்கவேண்டும். அதே நேரத்தில் பொறுப்புணர்ச்சியுள்ளதாக இருக்கவேண்டும்' என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இங்கு முடிவடைந்த ஆசிய பத்திரிகையாளர் மகாநாட்டில் ராஜாங்க அமைச்சர் உரைநிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறுகூறினர். அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

பத்திரிகைகள் அரசாங்கத்துக்கோ, எதிர்க்கட்சிக்கோ சாதகமுள்ளதாக இருக்கக்கூடாது. அப்பொழுது தான் அவைகள் மக்களுக்கு உண்மையான சேவைசெய்ய முடியும். நமதுநாடு எல்லாத் தேவைகளுக்கும் வெளிநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்யவேண்டும். இதனை நல்லமுறையில் செயல்படுத்த பத்திரிகைகள் பெரிதும் உதவவேண்டும்.

### இலக்கியமன்ற நிர்வாகிகள்

கொழும்பு, சனி

மத்தியவங்கி தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் திரு. மு. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது. மன்றத்தின் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்ட பின் பின்வருவோர் நடப்பாண்டு அலுவலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: செல்வி புஷ்பா காசிப்பிள்ளை. துணைத்தலைவர்: திரு. மா.க கனகேந்திரன். செயலாளர்: திரு. து. பாஸ்கரகுமாரன். துணைச்செயலாளர்: திரு. எஸ். பி. இராசா பொருளாளர் திரு. சோ. நடராசா. துணைப்பொருளாளர்: திரு. மு. சின்னத்துரை. நூல்நிலையப்பொறுப்பாளர். திரு.சி. துரைசிங்கம். ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# கெனடியைசுட்டுக்கொலைசெய்ய ஓஸ்வோல்டுக்குபணம்கொடுத்தார்

## நியூ ஆர்லின்ஸ் விசாரணையில் சாட்சியம்

### ஷோ மீது நீதிமன்ற விசாரணை

நியூஆர்லின்ஸ், மார்ச் 18

**அமெரிக்க ஜனதிபதி கெனடி கொலை சம்பந்தமாக நியூஆர்லின்ஸ் டிஸ்திறிக் அட்டோர்னியினல் நடத்தப்பட்டு வரும் விசாரணையில் ஓர் எதிரியானஉள்ளூர்வர்த்தகரான திரு.ஷோ என்பவர் நீதிமன்றத்தில் முறைப்படி விசாரணை செய்யப்படுவார். இத்தகவலை டிஸ்திறிக் அட்டோர்னி நேற்று வெளியிட்டார்**

ஜனதிபதி கெனடி கொலை சம்பந்தமாக நியூஆர்லின்ஸ் டிஸ்திறிக்அட்டோர்னி திரு. ஹரிசன் புதிதாக விசாரணை நடத்தி வருவதும் அதுசம்பந்தமாக சிலர் விசாரணை செய்யப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

இந்த [பூர்வாங்க] விசாரணையின்போது சாட்சியமளித்த வேணன் பண்டிஎன்பவர், திரு.ஷோ, ஒஸ்வோல்டுக்கு[ஜனதிபதி கெனடியை சுட்டுக் கொலை செய்தவருக்கு] பணம் கொடுத்ததாகவும் ஜனதிபதி கெனடியை சுட்டுக்கொலை செய்யுமாறு கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனல்ஷோஇதனைமறுத்துள்ளார். ஷோ இப்பொழுது பிணையில் விடப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனதிபதிகெனடியைச் சுட்டுக்கொலை செய்யச் சதித்திட்டம் வகுத்ததாக ஷோ மீது குற்றம் சுமத்தப்பட்டு மூன்று [நியூ ஆர்லின்ஸ்] நீதிபதிகள் கொண்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவார் என்று இங்கு அறிவிக்கப்பட்டது. நீதிமன்ற விசாரணையில் பலர் சாட்சியமளிப்பார்கள்.

### யுதாண்ட் தொடர்ந்து முயற்சி

நியுயோர்க், மார்ச் 18

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்துவதில் ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. நேற்று அவர் அமெரிக்க, ரஷ்யப் பிரதிநிதிகளை சந்தித்தார்.

### திருமண வயது

புதுடில்லி, மார்ச் 18

பெண்களின் திருமண வயதை 21 ஆக உயர்த்தும் யோசனைக்கு குடும்பக் கட்டுப்பாடு ஸ்டேட் மந்திரி டாக்டர் சந்திரசேகர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

### குளங்கள் திருத்தப்படும்

புன்னலைக்கட்டுவன், ஞாயிறு

புன்னலைக்கட்டுவனிலுள்ள வியவெளிக் குளம், யாக்காட்டுக் குளம் என்ற தூர்ந்துபோன இரு குளங்களும், வற்றுத ஊற்றுள்ளனவாகக் கருதப்படுவதால், விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவை புதுப்பிக்கப்படும்.

புன்னலைக்கட்டுவன் கிராம அபிவிருத்திச் சங்க முயற்சியைத் தொடர்ந்து அரசாங்கம் இவற்றைத்திருத்துவதற்குநடவடிக்கை எடுத்துள்ளது.

### புதியவரிமதிப்பீடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் 1968-ம் வருடத்துக்கான புதிய வருடாந்தமதிப்பீடு நேற்று முன்தினம்முதல் யாழ்ப்பாண மாநகரசபையால் நடத்தப்பட்டு வருகிறது.

## சபாநாயகர் ஆதித்தன் சம்பளத்தில் பாதி குறைப்பு

சென்னை, மார்ச் 18

தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. எஸ். பி. ஆதித்தன் தமது சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக் கொள்ள முன்வந்துள்ளார்.

சபாநாயகர் தேர்தலில் திரு. எஸ். ஆதித்தன் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட சுதந்திரா கட்சி அபேட்சகரை [illegible] அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். துணை சபாநாயகராக புலவர் கோவிந்தன் ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகருக்கு 1000 ரூபா வழங்கப்பட்டுவந்தது. திரு. ஆதித்தன் தமது சம்பளத்தில் 500 ரூபாவைக் குறைத்துக் கொண்டார். இதுபோல துணைசபாநாயகர் புலவர் கோவிந்தனும் தமது சம்பளத்தில் ரூ. 500-ல் 250-ஐ குறைக்க முடிவு செய்துள்ளார்.

### துணுக்காய் கி. ச. புதிய கட்டிடம்

துணுக்காய், சனி

துணுக்காய் கிராம சபையின் புதிய கட்டிடத்தை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து துணுக்காய் கி. மு. சங்க ''இராசரத்தினம்'' மண்டபத்தில் காரியாதிகாரி திரு. மா. இராஜரத்தினம் தலைமையில் ஒரு பகிரங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. க. சோமசுந்தரம் வரவேற்புரை கூறினர்.

பண்டிதர் கா.பொ. இரத்தினம் தமது உரையில் துணுக்காய்ப் பகுதி பல விதத்திலும் முன்னேற்றம் அடைந்து வருவதாகவும், இப்பகுதிமக்கள் உணவு உற்பத்தியில் அதிக கவனமும் உற்சாகமும் செலுத்துவதையிட்டு தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்.

உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. மாணிக்கவாசகர், திரு. வ. வேலுப்பிள்ளை, திரு. செ. மயில்வாகனம், திரு. வே. இளையதம்பி ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிசார் போக்குக்கு கண்டனம

யாழ்ப்பாணம், ஞாயிறு
''சென்ற 10-3-67 அன்று இஸ்லாமிய சோஷலிஸ முன்னணித்தலைவரையும், பிரதிநிதிகளையும் புகையிரத நிலையத்தில் வரவேற்று, வீடு திரும்பிய முஸ்லிம் சகோதரர்களை பொலிசார் எவ்வித காரணமுமின்றி, மிருகத்தனமான முறையில் குண்டாந்தடிகளாலும், 'பூட்ஸ்' கால்களாலும் தாக்கியதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசாங்கம் இவ் விஷயத்தில் பரிபூரண விசாரணையொன்றை நடாத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் சுதந்திரமாகப் பயமின்றி வாழ வழி செய்ய வேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறோம்' என அகில இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனத்தின் வண்ணார்பண்ணைக் கிளை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## பாதை சீர்கேடு

புதுக்குடியிருப்பு, சனி
புதுக்குடியிருப்பிற்கும் முல்லைத்தீவிற்கும் இடையில் உள்ள பாதை மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளதால் வாகனங்களில்போக்குவரத்துச் செய்வது மிகவும் கஷ்டமாயிருக்கின்றது. 1966-ம் ஆண்டு இவ்வீதியைச் செப்பனிடுவதற்காக குவிக்கப்பட்ட கருங்கற்கள் அப்படியே போட்ட இடங்களிலேயே இருப்பதால் வேறு வாகனங்கள் விலத்திச் செல்வதற்கோ அன்றேல் ஒழுங்காகச் செல்லவோ முடியாதிருக்கின்றது. இதனால் பொதுமக்கள் தொடர்ந்து கஷ்டப்படவேண்டியுள்ளது.

## தொழில் மந்திரி முகமது யாழ். வருவார்

குரும்பசிட்டி சனி
தொழில் வேலைவசதி வீடமைப்பு அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருவாரெனத் தெரிகிறது. இவருடன் ஐக்கியதேசியக்கட்சியைச்சேர்ந்த வேறுசில எம். பி. க்களும் விஜயம் செய்வர். யாழ்ப்பாண நகரில் மார்க்ஸிய எதிர்ப்பு முன்னணிப் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காகவே அமைச்சரும் மற்றைய எம். பி. க்களும் இங்கு வரவிருக்கின்றனர்.

# செய்திச்சுருக்கம்

காரைநகர், சனி
''எங்கள் கிராமத்தின் நீண்டகாலத் தேவையாக இருக்கும் ஒரு கிராம ஆஸ்பத்திரியை விரைவில் நிறுவித்தருவீர்கள் என எதிர்பார்க்கிறோம். முன்னாள் சுகாதார அமைச்சர் 1962ல் கிராம சபைக்கு எழுதிய கடிதத்தில் காரைநகரில் ஒரு கிராம ஆஸ்பத்திரி நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது என அறிவித்திருந்தார். ஆனால் இதுவரை அது கைகூடவில்லை. எங்கள் கிராம மக்களின் கஷ்டத்தைக் கருத்தில்கொண்டு விரைவில் ஆஸ்பத்திரி நிறுவ உதவிசெய்வீர்கள்என எதிர்பார்க்கிறோம்'' எனக் காரைநகர் பொது நல சேவா சங்கச் செயலாளர் திரு. ச. செல்லத்துரை சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன இப்பகுதிக்கு விஜயம் செய்தபோது சமர்ப்பித்த மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கைது

சங்கானை, சனி
சட்டவிரோதமாக இலங்கையில் பிரவேசித்துள்ளதாகச் சந்தேகத்தின் பேரில் எஸ். இராமன் செய்யுதுதாவுத் ஆகிய இருநபர்களையும் சங்கானைப் பொலிஸார் கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளனர்.

### சித்திரக் கண்காட்சி

புன்னாலைக்கட்டுவன், சனி
'அதிக உணவு உற்பத்தி' இயக்கத்தின் ஓர் அம்சமாக அகில இலங்கைப் பாடசாலைப்பிள்ளைகளின் சித்திரக் கண்காட்சி ஒன்று அடுத்த சித்திரை மாதமளவில் கொழும்பில் நடைபெறும்.

### இரும்பு, ரயர் தொழிற்சாலை

கொட்டாஞ்சேனை, சனி
ரஷ்யாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரும்புத் தொழிற்சாலையும், ரயர் தொழிற்சாலையும் இம் மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை அடுத்து ரயர் தொழிற்சாலையும் திறக்கப்படவுள்ளது.
இரும்புத் தொழிற்சாலை ஒறுவலயில் 20-ம் திகதியும் ரயர் தொழிற்சாலை களனியில் 23-ம் திகதியும் திறக்கப்படும்.

### 'முயற்சிப்போம்'

குரும்பசிட்டி, சனி
''கூட்டரசாங்க காலத்தில் நாட்டின் திறைசேரி காலியாக்கப்பட்டுள்ளது. இதனால் தேசிய அரசாங்கத்திற்கு பெரிய நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் பொது ஜனங்களின் கோரிக்கைகள் எல்லாவற்றினையும் உடனடியாக பூர்த்தியாக்கிவைக்க முடியாதிருக்கின்றது. எனினும் அத்தியாவசியதேவைகளைக்கூடியளவு தீர்த்துவைக்க முயற்சிப்போம்'' இவ்வாறு சுகாதார மந்திரி திரு. ஜெயவர்த்தன ஏழாலை கிராம முன்னேற்றச் சங்க கைத்தறி நிலையத்தினர் அளித்தவரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

### இன்னிசைக் கச்சேரி

கண்டி, சனி
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர்சங்கத்தினால் புதிதாக அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழக முருகன்கோவில் கட்டிட நிதிக்காக கானசரஸ்வதி டி. கே. பட்டம்மாளின் இன்னிசைக் கச்சேரி விரைவில் கொழும்பு சரஸ்வதிமண்டபத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் மண்டபத்திலும் நடைபெறவிருக்கின்றது. டி. கே. பட்டம்மாளுடன் மிருதங்க வித்துவான் பாலக்காடு மணியும் வருகிறார்.

### விக்கிரகங்கள் கண்டுபிடிப்பு

உடுவில், சனி
தெற்கு புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அண்மையிலுள்ள ஐயனார்ஆலய வீதியில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பல விக்கிரகங்களைக் கண்டுபிடித்துத் தோண்டி எடுத்துள்ளனர். இவ்விக்கிரகங்கள் மண்ணால் செய்யப்பட்டு மிக அழகாகவும், அழுத்தமாகவும் காட்சியளிக்கின்றன. இவ் விக்கிரகங்களுடைய காலம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

### பற்றறி இல்லை

சுழிபுரம், சனி
வானொலிப் பெட்டிக்கான பற்றறிக்குத் தட்டுப்பாடு கடந்த சில தினங்களுக்கு மேலாக இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது. எந்தக் கடைகளிலும் பற்றறியைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறது.

### இடமாற்றம்

சுழிபுரம், சனி
பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றிய செல்வி சு. சிவரத்தினம் இம் மாதம் தொடக்கம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### மிருகவைத்தியர் இல்லை

முல்லைத்திவு, சனி
முல்லைத்தீவில் கடமையாற்றிய மிருகவைத்தியரின் இடம் காலியாகி ஏறக்குறைய 8 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரையும் அவரின் இடத்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை இதனால் வவனியா வடக்குப்பிரிவுக் காரியாதிகாரிப் பகுதி, முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரிப் பகுதி மக்களும் தங்கள் கால்நடைகளுக்கு உரியநேரத்தில் சிகிச்சைசெபற முடியாதிருக்கின்றனர்.

### புதிய நிர்வாகிகள்

மீசாலை, சனி
மீசாலை வாலிபப்பேரவையின் ஆருவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மீசாலை தெற்கு ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில் திரு. வி. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.
நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- வி. மார்ககண்டு, உப தலைவர்- பொ. செல்வராசா, செயலாளர்- நா. இராசரத்தினம், உப செயலாளர்- தி. கேதீஸ்வரன், பொருளாளர்- ச. விநாயகமூர்த்தி, நிர்வாக அங்கத்தவர்கள்- கி. சத்தியமூர்த்தி, க. நடராசா, நா. கணேசன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

### கல்வி மந்திரியின் திட்டம்

கொழும்பு, சனி
பாடசாலை அதிபர்களுக்கு கூடிய அதிகாரம் வழங்கும் வகையில் திட்டமொன்றை கல்வி மந்திரி திரு. ஐ.எம். ஆர். ஏ.இரியகொல்லை தயாரித்திருக்கிறார்.
ஆசிரியர்களின் தவறுகளையும் அவர்களின் தேவையற்ற போக்குகளையும் கண்டிப்பதற்கும், அதற்கான முன்நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கும் அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் இந்தத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக

### ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

கொழும்பு, சனி
இலங்கைக்கும் இந்தியாவுக்குமான வர்த்தக ஒப்பந்தம் ஒன்று இன்று இங்கு கைச்சாத்தாகியது. இலங்கையின் சார்பில் திரு. சேனிவரத்தினவும், இந்தியாவின் சார்பில் திரு ஜாஜரும் கைச்சாத்திட்டுக்கொண்டனர். இந்தியா சர்க்கரை, புளி, அரிசி ஆகியவற்றை இலங்கைக்குகொடுப்பதெனவும்,இலங்கை றப்பர்,கொப்பரா,தேங்காய் எண்ணை ஆகியவற்றை இந்தியாவுக்குக் கொடுப்பதெனவும் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீவுப்பகுதியில் தண்ணீர் பிரச்னை

நாரந்தனை, சனி
இவ்வருடம் தீவுப்பகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்னை தலைதூக்கி, மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். இத்தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு உடனடியாக நீர் விநியோகம் செய்யுமாறு புங்குடுதீவு கிராமசபை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

### நெசவுப்பயிற்சிநிலையத் திறப்புவிழா

பருத்தித்துறை, சனி
நெல்லண்டை அரசாங்க நெசவுப் பயிற்சிநிலையத்தை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா திறந்துவைத்தார். திறப்பு விழாவுக்கு திரு. சி. மு. கந்தசாமி தலைமைவகித்தார்.


கலங்கள் வேறு....
உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனாவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.
மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட், பங்க்சால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க
கேள்விப் பத்திரங்கள்
நீர்ப்பாசனப் பகுதி

என் 612-யாழ்ப்பாணம் உப-பிரிவிலுள்ள இரணை மடுக் குளக்கட்டின் குளப் பக்கத்திலுள்ள கல்லுப் பதிப்பில் திருத்த வேலைகளும், அத்தோடு மருதங் குளம் பிரதான வாய்க் காலுக்குட்பட்ட அழியப் பட்டகுளம் கட்டுதலும்.

வவனியா கச்சேரி

என் 619 வவனியா மாவட்டத்திலுள்ள கல் மடுக்குளத்தில் குடியேற்ற அதிபரின் வீடுகட்டுதல்.

என் 620 வவனியா மாவட்டத்தில் கட்டிட வேலைகள்/திருத்த வேலைகள் செய்தல்.

இதன் முழு விபரங்களுக் கும் 17-3-67இல் வெளி யான அரசாங்க வர்த்த மானியின் Iம் பகுதி, IIம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 2255


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
பிரேம் நஸீர் - ராஜம்
நடித்த
**ஒரே வழி**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
சிவாஜி - குமாரி கமலா
நடித்த
**பாவை விளக்கு**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
Daily at 4-45, 7-00, 9-45
Secret agent 008
OPERATION EXTERMINATION
[Technicolor]


# இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி

### யாழ். கோஷ்டியுடன், அகிலஇலங்கை இளைஞர் கோஷ்டி மோதும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் உதைபந் தாட்ட விளையாட்டு சங் கம் இன்று ஞாயிற்றுக் கிழமை இலங்கை பாட சாலை இளைஞர் உதைபந் தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டிக்கும் இடையே ஒரு உதைபந்தாட்ட 'மோதல்' ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை இளைஞர் கோஷ் டியின் 'சிவப்புப் பிரிவு' யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டியுடனும், இலங்கை இளைஞர் கோஷ்டியின் நீலப் பிரிவு ''பிரெஸிடெ ன்ற்'' கோஷ்டியுடனுமாக இரு போட்டிகள் யாழ். விளையாட்டரங்கில் நடை பெறும். ஆசிய இளைஞர் உதைபந்தாட்டப் போட்டி யில் கலந்து கொள்வதற்கு ''பாங்கொக்'' செல்லவிருக் கும் இலங்கை இளைஞர் கோஷ்டியின் கடைசிப் போட்டிகள் இப் போட்டி களே!

இப்போட்டிகள் வடபிர தேச பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். தெரிவுக் கோஷ்டி வீரர் பின்வருமாறு: மைக் கல்தாஸ் [காப்டன்], மரிய நாயகம் [உதவிக் காப்டன்], தேவராசா, பென்னடிக், பெர்னண்டோ, சொய்ஸா, கிரேஸியன், அப்பையா, ராஜதுரை, கமலநாதன், கிறவுதர்.

## வல்வை 'புளூஸ்' கழகம் வெற்றி

வல்வெட்டித்துறை, சனி

வல்வை 'புளூஸ்' கழகத் திற்கும் யாழ்ப்பாணம் இளை ஞர் 'ஜில்லேஸ்' கழகத்திற் கும் இடையே நடைபெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில்வல்வை'புளூஸ்' கழகம் 4—0 கோல்களினால் வெற்றியீட்டியது.

இலங்கை தேசிய கரபந் தாட்டச் சுற்றுப்போட்டி யில் வடமராட்சிப் பகுதி யிலிருந்து வல்வை புளூஸ் கழகம் மாத்திரமே பங்கு பற்றுகின்றது. இக்கழகம் பருத்தித்துறை கரபந் தாட்டச்சுற்றுப்போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற தென்பது குறிப்பிடத்தக் கது.


REGAL - JAFFNA
NOW SHOWING
Shirley Jones
James Booth
in
THE SECRET OF MY SUCCESS


வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான

## பேச்சு, சங்கீத போட்டி முடிவுகள்

இமையாணன், சனி

வடமாகாண ஆசிரியர் சங் கத்தின் ஆதரவில் வட மாகாண பாடசாலைகளுக்கி டையேயான பேச்சு, சங்கீத, போட்டிகள் நேற்று யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில்நடைபெற்றன போட்டி முடிவுகள் வரு மாறு:-

ஆங்கிலப்பேச்சுப்போட்டி அதி மேற்பிரிவு [ஆண்கள்] எஸ். ஆர். கேதாஈஸ்வரன் [தெல்லிப்பழை மகாஜனா], ஈ. எப். சேவியர் [தெல்லிப் பழை மகாஜனா], பி. ஸ்ரீரா ஜன் [பருத்தித்துறை ஹாட்லி]. மேற்பிரிவு: எஸ். சுரேந்திரன் [யாழ். மத்திய கல்லூரி], என். ராஜகுமார் [பருத்தித்துறை ஹாட்லி], வி மனோகரன், [சென். ஜோன்ஸ் கல்லூரி]. மத்திய பிரிவு: எஸ். தெய்வேந்தி ரன் [யாழ்.மத்தியகல்லூரி], எஸ். டானியல் [கோப்பாய் கிறீஸ்ரியன்], ஜி. கே. ஜேசு ராஜா [சுன்னாகம் ஸ்கந்தா], கீழ்ப்பிரிவு: எஸ். சுரேஸ்குமார் [தெல்லிப்பளை யூனியன்], வி. ரவிராஜ் [பருத்தித்துறை ஹாட்லி], எஸ். சிவபாலன் [தெல்லிப் பழை மகாஜனா]. [பெண்கள்] அதிமேற்பிரிவு: ஆர். பவள சுண்டிக்குளிமகளிர்கல்லூரி, ஆர். லக்சுமி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி]. மேற் பிரிவு! ஏப்ரகாம் உசா [உடுப்பிட்டி ஆங்கிலப் பாட சாலை], ரி. சுகாந்தினி [சுண் டிக்குளி மகளிர் கல்லூரி], பி. சுலோசனா [வேம்படி மகளிர் கல்லூரி]. மத்திய பிரிவு: ஆர். உமையாள் [வேம்படி மகளிர்], எஸ். ரஞ்சினி [சுண்டிக்குளி மக ளிர்], சி. தயாளா [சுண்டிக் குளி மகளிர்]. கீழ்ப்பிரிவு: ஏ. கமலாம்பிகை [சுண்டிக் குளி மகளிர்], எஸ். பத்மினி [சுண்டிக்குளி மகளிர்], எஸ். விஜயலக்ஷுமி [தெல்லிப் பழை யூனியன் கல்லூரி]

**தமிழ்ப் பேச்சுப் போட்டி**

அதிமேற்பிரிவு [ஆண் கள்] கே. அருந்தவராசா [சுன்னாகம் ஸ்கந்தா], என். கிருஷ்ணராசா [பருத்தித் துறை ஹாட்லி], சி. நவரத் தினம் [தெல்லிப்பழை யூனி யன்] எஸ். நடராசா[ வல் வெட்டித்துறை சிதம்பரா]. மேற்பிரிவு: எஸ். சிவதா சன் [கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்], வி. லோகநாதன் [உரும்பராய் இந்து], குமரேஸ்வரராசா [உரும்பராய் இந்து]. மத் திய பிரிவு: வி. இளங்கோ [பரமேஸ்வரா], பி. சோதீ ஸ்வரன் [காரைநகர்இந்து], எஸ். சுந்தரலிங்கம் [தெல் லிப்பழை மகாஜனா]. கீழ்ப் பிரிவு! எஸ் சோதிநாதன் [தெல்லிப்பழை மகாஜனா], கே. சிவராசா [சாவகச்சேரி இந்து], விவேகானந்தன் [கொக்குவில் இந்து]. பெண் கள் [மேற்பிரிவு] என். கலா தேவி [தெல்லிப்பழை மகா ஜனா], கே. தெய்வானைப் பிள்ளை [தெல்லிப்பழை மகாஜனா], எம். நிர்மலா [சுன்னாகம் மகளிர் கல்லூரி]. மேற்பிரிவு: ஆர். நளாயினி [சுண்டிக்குளி மகளிர்], வி. சாரதா [தெல்லிப்பழை மகாஜனா], பி. ஸ்ரீரஞ்சனா [யாழ். இந்து மகளிர்].

[6-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### ஞாயிறு 19 - 3-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந் தனை, 6-45 துதிப்பாடல் கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லா மிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எமது அதிதி.

இரவு 6-15 நாட்டுப் பாடல்கள், 6-30 நேயர் விருப்பம், 6-45 கத்தோ லிக்க நிகழ்ச்சி, 7-15 [illegible] 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் கேட்டவை.

## வரி விளம்பரம்

### தேவை

மனேஜர்:

சுதுமலை வடக்கு ஐக்கிய பண்டகசாலைக்கு தமிழ் S. S. C. [ஆங்கில அறிவு விரும்பத்தக்கது] தராதர முடைய ஒருவர் தேவை. கூட்டுறவுப் பயிற்சிக் கலா சாலைப் பத்திரம் பெற்றவ ராகவும் 25—40 வயதுக் குட்பட்டவராகவு மிருத்தல் வேண்டும். மாத வேதனம் ரூ. 90-00 [சகலதுமுட்பட] பிணை:ரொக்கம்ரூ. 500-00. ஆதனம் ரூ.2000-00 காரிய தரிசி சுதுமலை வடக்கு ஐக் கியபண்டகசாலை, மானிப் பாய் என்ற விலாசத்திற்கு 31-3-67-க்கு முன் விண்ணப் பிக்கவும். 1635

### விற்பனைக்கு

சேவல் குஞ்சுகள்:

1நாள், 1கிழமை, 1மாதம் 2மாதக்குஞ்சுகள் விற்பனைக் குண்டு, விலை நிதானம். அருணா ஏஜென்ஸீஸ், அள வெட்டி. 1589

காணி

சாவகச்சேரிகோயிற்பற்று குறிச்சியைச் சேர்ந்த இறை நினைவன் வளவில் வடக்கும் மேற்கும் ஒழுங்கை வசதியு டன்கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. எம். பி. அமிர்தநாதர், மெயின்வீதி, கிளிநொச்சி. 1641

காணி

இயக்கச்சிக்கும், ஆனை யிறவுக்குமிடையில் 80 ஏக் கர் உறுதிக்காணி விற்பனை க்கு உண்டு. காணி பார்க்க விரும்புபவர்கள் நீதவான் காணி, விந்துவான் தோட் டம், இயக்கச்சி என்ற இடத்துக்குச் சென்றால் காணி காண்பிக்கப்படும். தென்னை, மா,கஜு முதலிய பயன்தரு பயிர்கள் உண்டு. விலைமொத்தமாக ரூ.75,000 கூடுதலான தொகைவழங்கு பவர்கள் தமது தொகை யைக்குறித்து விளம்பரஇல. 1640, 'ஈழநாடு' மே/பா, யாழ்ப்பாணம் என்ற விலா சத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1640

காணி

சுகத்திற்கு வசதியான வீடும்வளவும் [4 பரப்பும் 5 குளியும்] யாவாரிமூலை கடற்கரை வீதிக்குக் கிட் டாக விற்பனைக்கு இருக்கி றது. அமிர்தலிங்கம், 151, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பா ணம் மூலமாக அறியவும், 2362

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப் படுத்திய விபரங்கள் அடங் கிய கற்றலோக் இனும். மந் திரிமார் மற்றும் பிரமுகர் கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணா நந்தர், J. P., கைலாசபிள்ளை யார் கோவிலடி, யாழ்ப்பா ணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


ராதா மணி மார்க்
**சந்தனாதித் தைலம்**

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியா கவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவ தனால் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரை யின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப் படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-
**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7063

கிடைக்குமிடங்கள்:
நடனமுருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
குமாரவேல் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை



3வது வெற்றி வாரம்!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | நவா கொம்பனித்தெரு |
| விஜிதா ஹட்டன் | விஜயா மட்டக்களப்பு | கல்யாணி நாவலப்பிட்டி |

22 முதல் வெலிங்டன்
யாழ்ப்பாணம்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
**தாயின் மடியில்**

கடைசி வாரம்
வெலிங்டன்
யாழ்ப்பாணம்
ஜெமினி கணேசன் — சாவித்திரி
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த
**வல்லவனுக்கு வல்லவன்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்தியகல்லூரி - சென்.ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியை மழை கெடுத்துவிட்டது

குழந்தை மரணம்

## பெற்றோர் கவலையீனத்துக்கு மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''பிள்ளைகளைப் பெற்றால் மாத்திரம்போதாது, பேணி வளர்க்கவும் தெரிய வேண்டும். பெற்றோரின் கவலையீனத்தால் இப்படியான பல மரணங்கள் நடைபெற்றுள்ளன. பெற்றோர் கவனமாக இருந்திருந்தால் இப்பிள்ளை மண்ணெண்ணெய் குடித்திருக்காது'' என்று நேற்றுமுன்தினம் மண்ணெண்ணை குடித்துமரணமான யாழ்ப்பாணம் கன்வெண்ட் வீதியைச் சேர்ந்த தம்பு என்பவரின் மகளான சந்திரலேகா என அழைக்கப்படும் விஜயகுமாரி என்ற இரண்டுவயதுக் குழந்தையின் மரண விசாரணையில் தீர்ப்பளிக்கையில் மரண விசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம்தெரிவித்தார்.

மரணமானகுழந்தை சம்பவம் நடந்த தினத்தன்று அறைக்குள்ளிருந்த மண்ணெண்ணை விளக்கை தற்செயலாக எடுத்துக்குடித்ததென்றும் அப்போது குழந்தையின் தாய் வீட்டிலில்லையென்றும் தந்தை அறைக்குள் நித்திரையாகவிருந்ததாகவும், குழந்தையை அறிவில்லாத நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்த பின்னர் குழந்தை அங்கு மரணமானதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மண்ணெண்ணை குடித்ததால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [ந. நி]

### பேச்சு, சங்கீத...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மத்தியபிரிவு: எஸ். ஜெயகுமாரி [யாழ்.இந்துமகளிர்], எஸ். வசந்தி [தெல்லிப்பளை யூனியன்], என். மனோறனி [தெல். மகாஜனா]. கீழ்ப்பிரிவு: எம். சிவசோதிலக்ஷ்மி [சுளிபுரம் விக்டோரியா], எ. உமாராணி[யாழ். இந்து மகளிர்], கே. கலையரசி [மானிப்பாய் மகளிர்].

**பாட்டுப்போட்டி**

மேல்பிரிவு ஆண்கள்: எஸ். சண்முகராகவன் [சுன்னாகம் ஸ்கந்தா], எஸ். சங்கரராம் [கொக்குவில் இந்து], வி. சிவனானந்தராசா [சுன்னாகம் ஸ்கந்தா]. கீழ்ப்பிரிவு: எஸ். சிவகணராசா [அளவெட்டி அருணோதயா], ஆர். ரகுபதி [கரவெட்டி தேவரயாளி இந்து], எஸ். மாணிக்கராசா, [யாழ். இந்து]. பெண்கள் மேல் பிரிவு: வி. ஆர். மைத்தினி [வேம்படி மகளிர்], எஸ். வசந்தி [யூனியன் கல்லூரி], ஆர். நிர்மலா [வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.]

**கட்டுரைப்போட்டி**

ஆங்கிலம் ஆண்கள்: ஈ. ஈ. சேவியர் [தெல்லிப்பளை மகாஜனா], எஸ். சாந்திகுமார் [ஹாட்லி கல்லூரி], பி. ஸ்ரீ ராசன் [ஹாட்லி கல்லூரி]. பெண்கள்: ரி. சுகாந்தினி [சுண்டிக்குளி மகளிர்], எஸ். இந்திராகுமாரி [சுண்டிக்குளி மகளிர்], எஸ். செல்வினி [சுண்டிக்குளி மகளிர்], வசந்தாடானியல் கோப்பாய் கிறிஸ்ரியன்].

**தமிழ் கட்டுரைப்போட்டி**

ஆண்கள்: வி. சத்தியசீலன் [மகாஜனா தெல்லிப்பளை], எஸ். குணபாலசிங்கம், [யூனியன் தெல்லிப்பளை,] பி. தணிகாசலம் [மனிப்பாய் இந்து]. ஏ. கணேசமூர்த்தி [சுன்னாகம் ஸ்கந்தா]. பெண்கள்: ஆர். வசந்தகுமாரி [கோப்பாய் கிறிஸ்ரியன்], என். சுவர்ணலீலா [கோப்பாய் கிறிஸ்ரியன்], எம். கலாதேவி யூனியன் தெல்லிப்பளை].

### சுவாமி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பின்னர் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தை உருவாக்குவதில் சுவாமி விபுலானந்தருக்குப் பெருந்துணைபுரிந்தார்.

சுவாமி விபுலானந்தருக்குப்பின் ராமகிருஷ்ண மடபாடசாலையில் நெடுங்காலம் முகாமையாளராகக் கடமையாற்றினார். மட்டக்களப்பில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் அனாதை இல்லங்களைச் சிறப்பாக நடத்திவந்தார்.

### அனுபவ போட்டி

புன்னாலைக்கட்டுவன், சனி

அகில இலங்கையிலும் அதிக உணவுபயிரிடும் இயக்கத்தின் ஓர் அம்சமாக நெல் நடன, வேலை அனுபவ, சங்கீதப்போட்டியொன்று அடுத்தமாதம் 5-ந் திகதி கொழும்பில் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டி இம்மாதம் 21-ந் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இப்போட்டியை வடமாநிலக் கல்வியதிபதி ஒழுங்கு செய்துள்ளார்.

நடனங்களில் இப்பகுதியில் களைபிடுங்குதல், நாற்று நடுதல் அரிவு வெட்டுதல் ஆகிய அம்சங்கள்அமையும்.

### மூன்று மாத கடுங்காவல்

நாரந்தனை, சனி

ஊர்காவற்றுறையிலுள்ள பேக்கரியொன்றில் அத்துமீறிப்பிரவேசித்து குழப்பம் விளைவித்ததாக குருசு அப்பாக்குட்டிமீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு.ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிக்கு மூன்றுமாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

## திடீர் மழையினால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது

—நமது விளையாட்டு நிருபர் எம். எஸ். துரைராசா—

சென்ஜோன்ஸ்--மத்தியகல்லூரி கிரிக்கெட்போட்டியைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாண கிரிக்கெட் ரசிகர்கள் கொடுத்துவைக்காதவர்கள்! பெய்யவேண்டிய நாட்களிலெல்லாம் ''மௌனம்'' சாதித்த இந்தப் பொல்லாத மழை, நேற்று திடீரெனப்பெய்து ரசிகர்களின் நெஞ்சங்களைப் ''ப்டீர்'' என்று கலக்கிவிட்டது!! காலையிலே வெளுத்திருந்த வானம் அந்தப் பொல்லாத வேளையில் வாய்விட்டுச் சிரித்து கிரிக்கெட் ரசிகர்களைக் கொல்லாமல் கொன்றுவிட்டது!

### ஒன்றரை மணி நேரத்தில்....

யாழ். மத்தியகல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையேயான 69-வது வருடாந்த கிரிக்கெட்போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினமும் நேற்றும் தொடர்ந்து இரு நாட்கள் நடந்தது. இருந்தபோதிலும் நேற்று போட்டி ஆரம்பமாகி ஒன்றரை மணித்தியால ஆட்டத்தின் பின் எதிர்பாராதவிதமாக கடும் மழை பெய்த காரணத்தினால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. வடமாகாணத்திலேயே பெரிய கிரிக்கெட் போட்டியான இக் கிரிக்கெட்போட்டி பல்லாயிரக் கணக்கான ரசிகர்மத்தியில் மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமானது. முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 8 விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 281 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை முடித்துக்கொண்டது. இதில் ஆரம்பத் துடிப்படி வீரரான எஸ். ஜெயநாயகம் 87 ஓட்டங்களைப் பெற்றார். இவரது திறமையான ஆட்டத்தினால் பொலிசாரால் தடைசெய்யப்பட்டிருந்த சில அதிர்வெடிகள் கூட பொலிசார் முன்னிலையிலேயே வெடித்துவிட்டன! இவருடன் இணையாகத் துடுப்பெடுத்தாடிய ரி. விபுலானந்தன் தனது விக்கட்டை இழக்காமலே 52 ஓட்டங்களைப் பெற்றார்.

எஸ். சிவக்குமார் 20 ஓட்டங்களைகுறைந்த நேரத்தில் பெற்றார். இவர் தனது விக்கட்டை இழப்பதற்கு எதிர்கோஷ்டியில் போட்டியிட்டஇவரதுசகோதரர்சுகுமாரே காரணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது! பி. இராசதுரை 26 ஓட்டங்களும், காப்டன் சூரியகுமார் 20 ஓட்டங்களும், எம். சுரேந்திரா 20 ஓட்டங்களும் ஜே.ஞானக்கோன் 04 ஓட்டங்களும், எம். மூத்ததம்பி 22 ஓட்டங்களும், ரி. குலநாதன் 10 ஓட்டங்களும், எஸ். மகாலிங்கம் விக்கெட்டை இழக்காமல் 18 ஓட்டங்களும் முறையே பெற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் மத்தியகல்லூரியின் பந்தெறி வீரர்களான சுகுமார் 51 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுகளையும், யோகேஸ்வரன் 56 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும் 'காப்டன்' சிவசோதி 41 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு ஒரு விக்கெட்டையும் பற்குணராஜா 12 ஓட்டங்கள் [illegible] 1 விக்கட்டையும் [illegible] வீழ்த்தினர்.

### மத்தியகல்லூரி விளையாட்டு

இதையடுத்து மத்தியகல்லூரி தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்தது. நேற்று ஆட்டம் மழை காரணமாக நிறுத்தப்படும்போது மத்தியகல்லூரி 6 விக்கட்டுகளை இழந்து 98 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இதில் வி. கங்காதரன் 6 ஓட்டங்களையும், கே. நரேந்திரன் 14 ஓட்டங்களையும் எ. பற்குணராசா 08 ஓட்டங்களையும், பி. பாலேந்திரா 28 ஓடங்களையும், எம். ஏபிரகாம் 27 ஓட்டங்களையும் எஸ். சாந்திகரன் 3 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்தெறி வீரரான எம். சுரேந்திரா மொத்தம் 4 விக்கட்டுகளை மிகவும் துரிதமாக வீழ்த்தி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார். மற்றும் ரி. விபுலானந்தன் மத்தியகல்லூரியின் சிறந்த துடுப்படி ஆட்டக்காரரான எம்.ஏபிரகாமை வீழ்த்தினார். இத்துடன் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

கொட்டும் மழையிலும் ரசிகர்களின் ஆரவாரங்களும் அதிர்வெடிகளும் இருக்கத்தான் செய்தது. பொலிசார் மிகவும் உஷாராகவிருந்தும் ஒரு சில அசம்பாவிதங்கள் காரணமாக நேற்று முன்தினமும் நேற்றும் பொலிசார் சிலரைக் கைது செய்தனர். மத்தியகல்லூரியின் அடையாளக் கொடி ஆகாயவெடி மூலம் பறக்கவிடப்பட்டது கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

### இந்திரா மந்திரி.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மத்திய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் லோகசபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதுபற்றிய கேள்வி கிளம்பியபோது, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, அத்தீர்மானத்தை இன்றே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினார்.

ஆகவே, ராஜஸ்தான் பிரச்னை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்விவாதம் தொடர்ந்து திங்கட்கிழமை நடைபெறும்

இந்திரா மந்திரிசபை இம்மாதம் 13-ம் திகதி பதவியேற்றது. மத்திய மந்திரிசபை பதவியேற்ற ஆறுவது நாளில் [இன்று] முதலாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ளனர்.

### 1971 முதல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முதன்மந்திரிகளுடன் கலந்தாலோசித்தபின்னர் முடிவுகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரையை எதிர்தரப்பில் சுதந்திராகட்சியையும் சில சுயேட்சையாளர்களையும் தவிர மற்றவர்கள் கேட்காமல் ஒதுங்கியிருந்தார்கள்.

**நெருக்கடி நிலைமை**

இந்தியாவில் சீன ஆக்கிரமிப்பின்போது அமுலுக்கு கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலைமை ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர இதர எல்லாப்பகுதிகளிலும் அடுத்த ஜூலை முதல் ரத்துச்செய்யப்படும் என்று இன்று லோகசபையில் அறிவிக்கப்பட்டது.

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 13-ந் திருவிழாவான தின்று மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் திருஞானசம்பந்தர் தொடர்ச்சிப் பிரசங்கம் நிகழ்த்தப்படும். இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும்.

### விவசாயக் கழக கூட்டம்

கோண்டாவில், சனி

இணுவில் தேசிய விவசாய கழகத்தின்கூட்டம்இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நடைபெற்றது. இம்மாத நடுப்பகுதியில் ஒரு விவசாயப் பொருட்காட்சியை நடாத்துவதெனவும் அடுத்த மாத இறுதியில் வரப்போகும் கழக 2-வது ஆண்டுநிறைவு விழாவை யொட்டி விவசாய சம்பந்தமான பேச்சு நாடக போட்டிகளையும் ஒரு தேசிய விளையாட்டுப் போட்டியையும் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### பரிசளிப்பு விழா

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு சனசமூகநிலையங்களின் சமாஜ பரிசளிப்புவிழாவைஇம்மாத நடுப்பகுதியில் மானிப்பாயில் நடாத்த ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டுவருகின்றன பரிசளிப்பு வைபவத்துக்குப் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி அமைச்சர் அல்லது உதவி அமைச்சர் கலந்துகொள்வார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org